**<u>DVC – 06/2025</u>** Dt: 23.06.2026

சாட்சி மீண்டும் ஆஜராகி எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>23.06.2026</u>

<u>ம.சா.1–தீபலீலா, க/பெ.திவாகர்</u>

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் எனது கணவர் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் எனது கணவரின் தாயார் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் எனது கணவரின் சகோதரி என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் எனது கணவரின் தகப்பனார் என்றால் சரிதான். 5ம் எதிர்மனுதாரர் எனது கணவரின் அம்மாச்சி என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மசா.ஆ.3ம் ஆவணமானது என்னை 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முதுகுளத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த மனு என்றால் சரிதான். எனது திருமணத்தின்போது எனது பெற்றோர்கள் எனக்கு 20 1/2 சவரன் தங்க நகைகள் கொடுத்தார்கள் என்றாலும் அது என்னிடம் தான் உள்ளது என்றாலும் சரிதான்.

2) 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எனக்கு நகைகள் கொடுத்தார்கள் என்றாலும் அது என்னிடம் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் கொடுத்த 5 சவரன் நகை என்னிடம் தான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு 1/2 சவரன் நகை

கொடுத்தார்கள் என்றாலும் அது 1ம் எதிர்மனுதாரரிடம் உள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி 1/2 சவரன் நகை என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் எனது தாயாரின் வீடு தான் எனக்கு சொந்துவீடு. எனது பெற்றோர்களுக்கு நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது பெற்றோர்களின் பெயரில் விவசாய நிலங்கள் இல்லை என்றால் உள்ளது.

3) 05.03.2023 ம் தேதி நான் எனது பெற்றோரின் வீட்டிற்கு செல்கிறேன் என்று தன்னிச்சையாக வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. கடந்த 23.03.2023 ம் தேதி எங்கள் ஊர் மகாலில் ஊர்த்தலைவர் வேலுச்சாமி மற்றும் செயலாளர் மற்றும் எனது உறவினர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். அந்த பேச்சுவார்த்தையின்போது எனது உறவினர்கள் பெரியசாமி, கோமதி, சந்தியா ஆகியோர்கள் சேர்ந்து எனது கணவரை கெட்ட வார்த்தையில் பேசி 1ம் எதிர்மனுதாரரை அடிக்க வந்தார்கள் என்றால் சரியல்ல, எதிர்த்து தான் பேசினார்கள். மேற்படி சம்பவத்தை நான் மறைப்பதற்காகத்தான் நான் முதுகுளத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றாலும் அந்த புகாரில் உண்மை தன்மை இல்லாததால் தான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரரான எனது கணவர் எனது இடுப்பில் காயத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மசாஆ.4 ஆவணமானத்தில் எனது காயத்தின் சம்மந்தமாக எந்தவிதமான மருத்துவ குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எனது கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளதா என்றால் இல்லை.

4) 1ம் எதிர்மனுதாரரான எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று மாண்புமிகு முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP No.116/2025 மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் வாய்தாவில் ஆஜராகி வருகிறேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ.3 ஆவணத்தில் எனது கணவர் கோயம்புத்தூருக்கு அழைத்துக்கொண்டு சென்று என்னை கொடுமை படுத்தியதாக நான் குறிப்பிட்டுள்ளதை முதுகுளத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 23.03.2023 ம் தேதி கொடுத்த புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 50 சவரன் நகை கொடுத்தால் தான் என்னை வாழவைப்பேன் என்று கூறியுள்ளதாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

5) நான் திருமணத்திற்கு பின்னர் கோயம்புத்தூரில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். அப்போது நான் மாடிப்படியிலிருந்து மயங்கி விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு மயங்கி விழுந்ததை நான் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் எனது கணவரிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பு எனக்கு அடிக்கடி தலைசுற்றல், சாப்பிட்டவுடன் அடிக்கடி மலம் கழிக்க செல்வது மற்றும் திடீரென மயக்கம் ஏற்படும் என்றால் சரியல்ல. மேற்படி நோயின் காரணமாக எனது கணவருக்கு தெரியாமல் மருந்து மாத்திரை வாங்கி சாப்பிட்டு வந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி நோய்களுக்காக மருத்துவமனை சென்று சிறப்பு மருத்துவர்களை பார்ப்பதற்காக எனது கணவர் அழைத்தபோது நான் அவருடன் செல்லாமல் சிகிச்சை பெற மறுத்து எதிர்மனுதாரர்கள் மீது அபாண்டமாக பழிசுமத்துகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்திற்கு முன்பு மேற்படி நோய்கள் எனக்கு இல்லை என்று மருத்துவரிடம் சான்று பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

6) மேற்படி நோய்களின் தன்மை எனது கணவருக்கு தெரிந்ததன் காரணமாக நான் சிகிச்சைக்கு செல்லாமல் அதன் குறைகளை மறைத்து ஜீவனாம்சம் கேட்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்கிறேன் என்பதால் எனக்கு கிடைக்கவேண்டிய பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

DVC.No. 06/2025

Petitioner side witness.02

| | |
|---|---|
| பெயர் : முத்துலெட்சுமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

23.06.2026

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கின் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். மனு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் எனது தரப்பு வாய்மொழி சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். எனவே, நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.